செ.கு.எண்: 401 நாள்: 30.05.2008

## செய்தி வெளியீடு

### தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான டாக்டர் அம்பேத்கார் மருத்துவ உதவி திட்டம்.

டாக்டர் அம்பேத்கார் ஸ்தாபனம் சமூக நீதி மற்றும் நிர்வாக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் சுயாட்சி பெற்ற அமைப்பு. இவ்வமைப்பு ஜனவரி 2004 முதல் சோதனை முறையில் சில மாநிலங்களில் 10 தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளில் "டாக்டர் அம்பேத்கார் மருத்துவ உதவி திட்டத்தினை" செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களில் ஆண்டு வருமானம் ரூ. 50,000/—க்கு குறைவாக உள்ளோர் சிறுநீரகம், கல்லீரல், மூளை, இருதயம் குறித்த நோய்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியுள்ளோர், மூட்டு அறுவை சிகிச்சை, தண்டுவட அறுவை சிகிச்சையை செய்து கொள்ளலாம். இத்திட்டம் மைய /மாநில மற்றும் சில தனியார் மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி

1) விண்ணப்பதாரர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத்தை சார்ந்தவராகயிருத்தல் வேண்டும்.
2) ஆண்டு வருமானம் ரூ. 50,000/—க்கு மிகாமலிருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய முறை.—

டாக்டர் அம்பேத்கார் மருத்துவ உதவி திட்டத்திற்கான வரையறுக்கப்பட்ட விண்ணப்படிவங்கள் அரசு மருத்துவமனை/ அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்படும். இத்திட்டத்தில் விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பத்தினை சிகிச்சை பெறும் அரசு மருத்துவமனை கண்காணிப்பாளரின் சான்றொப்பம் பெற்று அனுப்பவேண்டும். விண்ணப்பம் சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், குடும்ப அட்டையுடன் மருத்துவ சிகிச்சை பெறும் மருத்துவமனை கண்காணிப்பாளர் சான்றொப்பமிட்ட சிகிச்சைக்கான மதிப்பீட்டுடன் அனுப்ப வேண்டும். விண்ணப்ப படிவங்கள் சம்பந்தப்பட்ட அரசு மருத்துவமனை / அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்திற்கான விண்ணப்பத்தினை பாராளுமன்ற உறுப்பினர் (மேலவை /கீழவை) (அ) மாவட்ட நீதிபதி மற்றும் மாவட்ட ஆட்சியர் / துணை ஆணையர் மற்றும் மைய / மாநில மக்கள் நல்வாழ்வு அல்லது சமூக நல செயலர் ஒப்பம் செய்து அனுப்பலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குநர், டாக்டர் அம்பேத்கார் அமைப்பு, 15 ஜன்பாத், புதுடெல்லி என்ற முகவரிக்கு அறுவை சிகிச்சை / சிகிச்சைக்கு 15 நாட்களுக்கு முன்னதாக வந்து சேர வேண்டும். டாக்டர் அம்பேத்கார் அமைப்பில் பெறப்படும் அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்.

பணம் பட்டுவாடா செய்தல்.–

டாக்டர் அம்பேத்கார் மருத்துவ உதவி திட்டத்தில் ரூ. 1,00,000/– என்ற வரம்புக்குட்பட்டு சிகிச்சைக்கான செலவினில் 75 % சிகிச்சை பெறும் மருத்துவமனைக்கு நேரடியாக அனுப்பப்படும். இதில் 50% கோடிட்ட காசோலை / வரைவோலை அறுவை சிகிச்சைக்கு முன்னதாக மருத்துவமனைக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மீதமுள்ள தொகை அறுவை சிகிச்சைக்குப் பின்னர் அல்லது மருத்துவமனை காப்பாளரின் சான்றொப்பமிட்ட இறுதி செலவு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டவுடன் அனுப்பி வைக்கப்படும். இத்திட்டத்தில் பெறும் சிகிச்சைக்கான செலவினம் நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்குட்பட்டேயிருக்க வேண்டும். இதற்கான சான்றிதழை குறிப்பிட்ட மருத்துவமனை கண்காணிப்பாளர் அளிக்க வேண்டும். மதிப்பீட்டு சான்றிதழில் அறுவை சிகிச்சைக்கான நாள் குறிப்பிடப்பட வேண்டும்.

வி. கு. சுப்புராஜ்.
அரசு செயலாளர்.

வெளியீடு, இயக்குநர்:
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9